**சுற்றுலா அபிவிருத்தி நிதியம் - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எமும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த நூற்றுக்கு 0.5 வீதமான சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி ரூபா 3,384,455 ஆனது நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகவும் மற்றும் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அறவிடப்பட்டிருந்த சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி ரூபா 3,384,455 தொகையில் ரூபா 1,757,846 தொகை திறைசேரிக்கு | மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரித் தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படாது செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 1,626,609 ஆனது மட்டுமே நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | அனுப்பப்பட்டது. அட்டுறு செலவுகள் ரூபா 1,626,608 ஆன தொகை திறைசேரிக்கு அனுப்ப வேண்டுமாயின் வங்கி இணக்கக் கூற்றுத் தயாரிக்கப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் சரிபார்க்கப்பட்ட பின்னரே ஆகும். | |
| (ஆ) | 2019 நவம்பர் மாதம் 06 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திர இலக்கம் அமப/19/2797/123/110 ஆன அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விலகல் வரி வருமானத்தில் பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக உபயோகிக்கப்படுவதற்காக வேண்டி நிதியத்திற்கு பெறவேண்டிய தொகையில் தக்க வைக்கப்பட்டிருந்த ரூபா 801,376,894 ஆன தொகை மற்றும் மேலும், செலுத்த வேண்டிய ரூபா 248,623,106 தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் போதுமானளவு வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடங்களில் நிதிக் கூற்றுக்களில் வெளிக் காட்டுவதற்கு உடன்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதியத்திற்கு பெறவேண்டிய தொகையில் தக்க வைக்கப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் செலுத்த வேண்டிய தொகைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட வேண்டியமை. |

**1.5.2 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத் துறை அலுவல்கள் சட்டம் | | | |
| • III ஆம் அத்தியாயத்தின் 23(2)(அ) பிரிவு | • இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையால் | நூற்றுக்கு 2.5 வீதம் சேவைக் கட்டணம் தக்க வைக்கப்படுவதற்கு | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| சேகரிக்கப்பட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த விலகல் வரி வருமானத்தில் 1/3 பகுதிக்குரியவை மீளாய்வாண்டில் சேவைக் கட்டணமாக நூற்றுக்கு 2.5 வீதம் அல்லது ரூபா 74,119,772 ஆனது குறைக்கப்பட்டமை சம்பந்தமாக சட்டத்தின் ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2009 சனவரி 29 ஆந் திகதிய PF/R/4/019 ஆம் இலக்க கடிதத்தின் திறைசேரி உடன்படுவதாக காட்டப்பட்டிருந்தது. | வேண்டியமை. |
| • பிரிவின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தின் மூன்றில் ஒன்று (நூற்றுக்கு 33 1/3) நிதியத்திற்கு பெறவேண்டியவை. எனினும் சட்டத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படாது 2016 திசெம்பர் 27 ஆந் திகதி 1999/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகள் மற்றும் 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய திறைசேரிச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட 50 அ.டொலர் பணத்தில் 5 அ.டொலர் மட்டுமே நிதியத்திற்கு பெறப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக சட்டத்திற்கான திருத்தங்கள் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எனினும் 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தீல் நிதி அமைச்சு 35 அ.டொலர் தொகையை திறைசேரிக்கு் வழங்குவதற்கு கட்டளை இட்டிருந்தது. மிகுதி 15 அ.டொலர் தொகையின் மூன்றிலொரு பங்கு நிதியத்திற்கு வழங்கப்பட்டது. | சட்டத்தின் பந்தி திருத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| • 24(3) பந்தி | பந்தியின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் சம்பந்தமாக விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் நிர்வாகச் செலவுகளாக மீளாய்வாண்டில் ரூபா 4,732,256 செலுத்தப்பட்டிருந்தது. | நிர்வாகச் செலவுகள் தொடர்பாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் செய்தல் தொடர்பாக குறிப்பிட்ட விதிகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டினுள் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய வருமானம் ரூபா 3,036 மில்லியன் என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் வருமானம் ரூபா 4,318 மில்லியன் என்பதால் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் வருமானத்தில் ரூபா 1,282 மில்லியன் ஆன பின்னடைவு காணப்பட்டது. முந்திய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விலகல் வரி வருமானம் ரூபா 735 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 558 மில்லியனால் குறைவடைந்திருந்தமை மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 2(ஆ) உப பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே செல்லும் ஒரு கப்பலுக்கு இலங்கையை விட்டு வெளியேறும் ஒரு பயணிக்காக விநியோகிக்கப்படுகின்ற சகல டிக்கட்டுக்களுக்கான வரி அறவிடப்பட்டு அதனுள் ஒரு பகுதி நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு கப்பல் மூலம் பயணிக்கும் பயணிக்கான வரி அறவிடப்பட்டு நிதியத்திற்கு | இலங்கையிலிருந்து கப்பல் மூலம் பயணிக்கும் பயணிகளுக்கான விலகல் வரி அறவிடப்படுவதற்குரிய செயன்முறை ஒன்று இல்லை என்று வணிகக் கப்பல் செயலகத்தினால் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்குத் தெரிவித்துள்ளது. | சட்டத்தின் 2(ஆ) உப பிரிவின் பிரகாரம் கப்பல் மூலம் இலங்கைக்கு வெளியே பயணிக்கும் பயணிகளுக்காக விநியோகிக்கப்படுகின்ற அனைத்து டிக்கட்களுக்குமான வரி அறவிடப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பப்படவில்லை. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் 2019 ஆம் வருடத்திற்குள் 100,614 பயணிகள் வெளியேறியிருந்த போதிலும், அதற்காக ஒரு பிரயாணிக்கு அமெரிக்க டொலர் 1.66 ஆக மீளாய்வாண்டிற்குரிய நிதியத்திற்கு பெறவேண்டிய அமெரிக்க டொலர் 167,019 அதாவது ரூபா 29,729,382 ஆன விலகல் வரி வருமானம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஆ) | வங்கிக்கு நேரடியாக அனுப்பப்பட்ட ரூபா 1,187,785 வருடத்திற்கு மேற்பட்டவையாக இருப்பதுடன் இற்றை வரையில் சரியாக இனங்கண்டு கணக்குகளில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அத்தொகைக்குரிய விபரமான தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் அவை வரி வருமானக் கணக்கில் எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிக் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டவை சரியாக இனங்காணப்பட்டு கணக்குகள் நாளதுவரையாக்கப் படுவதற்கு முறைமையொன்று ஏற்படுத்தப்பட வேண்டியமை. |